**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 106 of 2019

Depositions of DW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சின்னசாமி

Father's Name : த/பெ. வடிவேல்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of December 2022.

**முதல்விசாரணை**

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய சொந்த ஊர் கொள்ளுபாளையம் ஆகும். மனுதாரர் கொள்ளுபாளையத்தை சேர்ந்தவர் என்பதால் அவர் சென்று வரும் போது பார்த்துள்ளேன். சுதா என்பவரின் என்னுடைய மனைவி சீட்டு போட்டிருந்தார். நிறைய பேர் சீட்டு போட்டிருந்தார். எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது.

2. சுதா கொள்ளுபாளையத்தில் தான் சீட்டு நடத்தி வந்தார். சுதா சீட்டு எடுத்தவர்களுக்கு பணம் கொடுக்காமல் விட்டுவிட்ட காரணத்தினால் பாதியிலேயே சீட்டு நடத்துவதை நிறுத்தி விட்டார். அதனால் பொதுமக்கள் சுதாவிடம் சென்று பணத்தை திருப்பி கேட்டார்கள். அதற்கு சுதா நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றும் பணத்தை திருப்பி

கொடுக்க இயலவில்லை என்றும் தெரிவித்தார். அதனால் சீட்டு போட்டவர்கள் காவல் நிலையத்திற்கு சென்று புாகர் அளித்தார்கள்.

3. கே. சின்னசாமி மற்றும் காங்கேயன் ஆகியோர் என்னுடைய ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் எனக்கு தெரியும். சுதாவின் வீடு புகுந்து பத்திர ஆவணங்களை எல்லாம் எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. சுதா கூறியதன் பெயரில் எதிரியின் இடத்தினை அடமானம் வைப்பது போன்று ஒரு பத்திரத்தை எழுதினோம். தேதி சரியாக ஞாபகம் இல்லை. அப்பத்திரமானது என்வசம் இல்லை. கே.சின்னசாமி வசம் தான் உள்ளது.

4. எதிரிக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. சீட்டு பணம் கொடுக்க வேண்டியிருந்ததால் சுதா கூறியதன் பெயரில்தான் அந்த ஈடுகடன் பத்திரம் எழுதப்பட்டது. அப்பத்திரத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ள ராமகிருஷ்ணன் மற்றும் ரெங்கையா எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் ஆவார். திருவேங்கடசாமி என்பவரை எனக்கு தெரியாது. அந்த ஒரு பத்திரம் மட்டும் தான் என்னை வைத்து எழுதப்பட்டது. மேலும் சுதாவின் இடபத்திரம் குறித்து என்னுடைய பெயர் மற்றும் கே. சின்னசாமியின் பெயரும் எழுதப்பட்டது.

5. சின்னசாமிக்கு அதிக பணம் வரவேண்டி இருந்ததால் நான் அந்த பத்திரத்தை அவரிடமே கொடுத்துவிட்டேன். எவ்வளவு தொகை என்று எனக்கு தெரியாது. சீட்டு போட்டவர்கள் அனைவரும் அவர்களுக்கு வரவேண்டிய தொகைக்காக சுதாவின் சொத்தினை எழுதி பதிவு செய்து பெற்று கொண்டார்களா என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு எதிராக சுதா வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை முதலில் அனுபியிருந்தார். நான் எனக்கு எதுவும் வேண்டாம் என்று கூறி அவர்களையே பார்த்துகொள்ளுமாறு கூறிவிட்டேன்.

6. ஊர் பொதுமக்கள் கூறியதன் பெயரில் அப்பத்திரத்தை எழுதினேன் என்றால் சரிதான். மனுதாரருக்கும் சுதாவிற்கும் இடையேயான வரவு செலவு குறித்து எனக்கு தெரியாது. மனுதாரர் சுதாவிடம் சீட்டு போட்டாரா என்றால் அது எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.12.13 18:26:51 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**